# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

. . . . . . . . . . .

முறையீட்டு மனு எண்: 0061/2017/ந

ஆணை எண்: 129/2017

நாள்: 21/05/2017

திரு. என். சிவன்ராஜ்,
எண்.59/30, பிரகாசம் சாலை,
பிராட்வே தியேட்டர் அருகில்
சென்னை – 1. — முறையீட்டு மனுதாரர்

2. 13.03.2017 நாளைய தினகரன்
நாளிதழ் செய்தி — இம்முறைமன்ற நடுவத்தால் தாமாக முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
பல்லவபுரம். — எதிர் மனுதாரர்

## ஆணை

திரு. N. சிவன்ராஜ், என்பவரது 01.03.2017 அன்று வரப்பெற்ற மனு அரசு செயலர், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு முகவரியிடப்பட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்டிருந்தது. இம்முறைமன்றத்திற்கு முறையீடாக அனுப்பப்படவில்லை. மேலும் 2015-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளின்படி உரிய படிவத்திலும், நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடனும் இம்முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்டு தாக்கல் செய்யப்படவில்லை. எனவே,

மேற்படி விதிகளின்படி முறையீட்டினை தாக்கல் செய்யுமாறு இம்முறைமன்ற நடுவ கடித எண்.0276/2017/ந நாள்:10.03.2017ல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே 13.03.2017 நாளைய "தினகரன்" நாளிதழ் செய்தியில் "பல்லாவரம் நகராட்சியில் டெண்டர் வழங்கியதில் முறைகேடு" எனும் தலைப்பில் மனுதாரர் அளித்துள்ள புகார் மனு குறித்து செய்திகள் வெளிவந்தன. இச்செய்தியின் அடிப்படையில் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7ன் கீழ் இம்முறைமன்ற நடுவத்தால் தாமாக முன் வந்து முறையீட்டு எண்.0061/17 ஆக பதிவு செய்து, விரிவான அறிக்கை சமர்ப்பித்திட பல்லாவரம் நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை முறையீட்டு மனு எண்.0061/17/ந நாள்:28.03.2017ல் ஆணையிடப்பட்டது.

அதன்படி பல்லாவரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.1800/2017/இ1, நாள்:07.04.2017ல் வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் புகாரில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப் பணிகள் முறைப்படி நடைபெற்றுள்ளதென தெரிவித்து கீழ்க்கண்டவாறான சான்றுகள் அளித்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

i) ஒப்பந்த பணிகளுக்கு அரசு அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் மதிப்பீடு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

ii) ஒப்பந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி தீர்மான எண்.45,52,65,57,72,78, 79, 60, 87, 88 & 89 நாள்: 30.01.2017ல் மன்ற அனுமதி பெறப்பட்டது.

iii) பணிகளுக்கு 17.02.2017ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டது.

iv) ஒப்பந்தப்புள்ளியில் கண்டுள்ள 20 பணிகளுக்கு மாநில அளவில் தமிழ், ஆங்கிலம் இரண்டு செய்தி தாள்கள் மற்றும் மாவட்ட அளவில் செய்தி மலரிலும் (Bullet in) விளம்பரம் செய்யப்பட்டது.

v) தமிழக அரசு ஆணைப்படி ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 20 பணிகளுக்கு முறையாக மின்னணு மூலம் ஒப்பந்தப்புள்ளி (E- Tender) அறிவிப்பு செய்து இணையதளம் மூலம் இலவசமாக ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்து ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள 24.02.2017ல் இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டது.

vi) E-டெண்டர் மூலம் ஒப்பந்த பணிகளுக்கு online மூலமாகவும் offline மூலமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

vii) பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு ஒப்பந்ததாரர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நாளிதழில் உண்மைக்கு புறம்பான செய்தி வெளியிடப்பட்டுள்ளதெனவும், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லையெனவும், தமிழக அரசு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென உறுதிபட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடர்புடைய ஆவணங்களின் நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், மனுதாரருக்கு தக்க பதிலளிக்குமாறு பல்லாவரம் நகராட்சி ஆணையருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 23-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒப்பம்/-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   பல்லாவரம் நகராட்சி,
   பல்லாவரம்,
   குரோம்பேட்டை, சென்னை – 600 044.

2. திரு. என். சிவராஜ்,
   எண்.59/30, பிரகாசம் சாலை,
   (பிராட்வே தியேட்டர் அருகில்)
   பிராட்வே, சென்னை – 600 001.